செ.வெ.எண். 226 நாள்.05.04.2018.

# திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றில் வெளிநாட்டு தேளி மீன்களை கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கெண்டை மீன்களை இருப்பு செய்யும் திட்டத்தினை துவக்கி வைத்தார்.

--------

திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையினை ஒட்டியுள்ள வட்டாரங்களில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மீன்வளத்துறை, திருநெல்வேலி மூலம் தாமிரபரணி ஆற்றில் உள்ள வெளிநாட்டு தேளி மீன்களை கட்டுப்படுத்துவதற்கு ரூ.7.50 இலட்சம் செலவில் திட்ட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, மாநில திட்ட ஆணையம் மூலம் ரூ.7.50 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டது. அத்திட்டத்தின் கீழ் **அம்பாசமுத்திரம் ஆற்றுப்பாலம்** தாமிரபரணி ஆற்றில் கெண்டை மீன்களை இருப்புச் செய்யும் பணியினை திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப அவர்கள் தாமிரபரணி ஆற்றில் இன்று (05.04.2018) **முதற் கட்டமாக** ரூ.50,000 மதிப்புள்ள 50,000 மீன் விரலிகளை இருப்புச் செய்து **இத்திட்டத்தினை** துவக்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில்,** சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்.,இ.ஆ.ப**., அவர்களும்** மீன்விரலிகளை இருப்புச் செய்தார்கள். **இந்நிகழ்வில்** திருநெல்வேலி மீன்துறை உதவி இயக்குநர் திரு.ப.பிரதீப்குமார், மணிமுத்தாறு மீன்துறை உதவி இயக்குநர் திரு.விஜயராகவன், அம்பாசமுத்திரம் தாசில்தார் திருமதி**.சொர்ணம், கல்லிடைக்குறிச்சி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.முத்துக்குமார்,** மீன்துறை ஆய்வாளர் திரு.பாலமுருகன், மீன்துறை சார் ஆய்வாளர் திரு.கோபிகிருஷ்ணகுமார், கல்லிடைக்குறிச்சி உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த திரு.பிச்சையா, திரு.முத்தையா மற்றும் பிற உள்நாட்டு மீனவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.